மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டு கோள் பரிசீலிக்கப்படும்.

## வழிகாட்டிகள் நியமனம்.

*5211—திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை நகருக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலனை முன்னிட்டு முகவர் உரிமை பெற்ற வழி காட்டிகள் நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மதுரை நகருக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டுவதற்காக அரசு அங்கீகாரம் பெற்ற வழிகாட்டிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 1990-91-ல் 5 வழிகாட்டிகள்—ஒரு இடத்திற்கு 5 வழிகாட்டிகளாக, ஆக மொத்தம் 30 வழிகாட்டிகள் நியமிக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் தமிழ்நாட்டில், அனைத்துக் கோயில் களிலும் பின்பற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு வெளிநாட்டுப் பயணிகள் ஆர் வம் காட்டுகிறார்களோ அங்கே இருக்கின்ற சிற்பக் கலைகளைப் பார்ப்பதற்கு—குறிப்பாக, திருச்சியிலே இருக்கக் கூடிய கோயில்களில், மலைக் கோயில்கள் இருக்கின்றன; அங்கே இருக் கக்கூடிய சிற்பக் கலைகளில் ஆர்வம் காட்டுகிறார்கள்: அதைப் போன்ற இடங்களிலே வழிக்காட்டிகள் நியமிக்கப்படுவார்கள்.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வழங்கி இருக்கின்ற முகவர் உரிமை பெற்று வழிகாட்டியாக இருக்கக் கூடியவர்களுக்கு ஏதும் படிப்புத் தகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

*1990 ஏப்ரல் 20]*

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் தவிர வேறு சிலமொழிகள்— இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகள் தெரிந்தவர்கள் இப்படிப் பட்ட வழிகாட்டிகளாக ஆவதற்கு பயிறசி தரப்பட்டு, அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பதைப் போல, 'கெய்டு' என்றால், அவர்களுக்கு எந்தக் கல்வித் தகுதியும் இல்லாத நிலை இப்போது இருக்கிறது. பிளஸ் டூ படிக்கின்றவர்களுக்கு 'வொகேஷனல் கோர்ஸ்' (Vocational Course) என்றிருக்கிறது, 'டிரெஸ் மேகிங்' என்பது இப்போது பாடமாக இருப்பதைப் போல, 'கெய்டு' என்பதையும் பிளஸ் டூ-விலே பாடமாக வைத்து, தமிழ் கலாச்சாரம் பல்வேறு சுற்றுலா இடங்களின் வரலாறு பல மொழிகள் கற்றுவித்து, அதிலே தேர்வெழுதி தேறியவர்களுக்கு முன்னுரிமை தரக்கூடிய அளவிற்கு, பயிற்சி தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ் டூ-விலே மட்டுமல்ல; இன்னும் சொல்ல வேண்டுமானால், பட்டப்படிப்பிலே கூட, இப்படிப் பட்ட சில பாடங்களைப் புகுத்தி, பட்டம் பெற்றவர்களையே இதற்கு நியமித்தால், இன்னும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஏற்கனவே, சுற்றுலா ஒரு பாடமாக இருக்கிறது "Tourism" என்று.

**திரு. ஏ. சி. தயாளன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பயணிகளுக்கு வழிகாட்டிகளாக வருகின்றவர்கள், அந்த ஸ்தலத்தைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமான ஒன்று. ஏனென்று சொன்னால், சில இடங்களில் தகவல்களை மாற்றி சொல்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், ஸ்தலத்தைப் பற்றிய அறிவு உள்ளவர்களையே அந்தந்த இடங்களுக்கு நியமிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற வழிகாட்டிகள் மாற்றி சொல்கின்றார்களா, சரியாக சொல்கின்றார்களா என்பதை நான் இங்கே சொல்ல முடியவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற வழிகாட்டிகளினுடைய தரம், போதுமானதாக இல்லை என்பதை, இந்தத் துறை அறிகிறது. ஆகவே, மேலும் பயிற்சி தந்து— ஏற்கனவே நான் சொன்னதைப் போல, பட்டப்படிப்பு படித்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அந்தத் துறையில் இருக்கக் கூடியவர்களின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.